SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

ZERO™ Current Affairs
0% Effort | 100% Results



# தமிழ்நாடு

## வேளாண் நிதிநிலை அறிக்கை

## 2023 - 24

# வேளாண் நிதிநிலை அறிக்கையின் முக்கியம்சங்கள் - 2023

## வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

1. ***கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்***
   a. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணைதல்
   b. ***2,504 கிராம பஞ்சாயத்துகளில்*** செயல்படுத்தப்பட்டது
2. ***தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்*** :
   a. சர்வதேச சிறுதானிய ஆண்டு - 2023
   b. ஐந்தாண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.
   c. 20 மாவட்டங்களை உள்ளடக்கிய ***இரண்டு சிறுதானிய மண்டலங்கள்*** கடந்த வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டன. தற்போது மேலும் ஐந்து புதிய மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
      a. நாமக்கல்
      b. திருப்பூர்
      c. கோயம்புத்தூர்
      d. ஈரோடு மற்றும்
      e. புதுக்கோட்டை
   d. ***நீலகிரி*** மற்றும் ***தருமபுரி*** *மாவட்டங்களில்* உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு *2* ***கிலோ கேழ்வரகு*** சோதனை முறையில் விநியோகம் செய்யப்படும்.
   e. ***சிறுதானிய திருவிழாக்கள்*** - விழிப்புணர்வு மற்றும் நுகர்வை அதிகரிக்கும் வண்ணம்.

3. ***<u>மாநில வேளாண் வளர்ச்சி திட்டங்கள்:</u>***
   a. ***கிராம வேளாண் வளர்ச்சிக் குழு***
      i. இது ***25 முதல் 50*** விவசாயிகளைக் கொண்டது.
      ii. KAVIADP திட்டத்தின் கீழ் 2504 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது
      iii. சாகுபடியின் மூலம் வருமானத்தை அதிகரித்தல்
      iv. இக்குழுவிற்குத் தேவையான பயிற்சி வழங்கப்படும்

b. ***நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் வகைகள்*:**

i. தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் வகைகளை பாதுகாத்தல் மற்றும் மக்களிடையே பரவச் செய்தல்.

ii. 200 ஏக்கர் பரப்பளவில் அரசு விதைப் பண்ணைகளில் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

c. ***சிறப்பாகச் செயல்படும் விவசாயிகளுக்கான வெகுமதிகள்***

i. மாநில அளவில் ஒரு குறிப்பிட்ட பயிரில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ஐந்து லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு.

ii. அதிகாரிகளுக்கு விருதுகள் - தொகுதி மற்றும் மாவட்ட அளவில் தாக்கல் செய்யப்பட்ட - அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனைப் பொருத்து.

d. ***குறுவை பருவத்தில் மாற்று பயிர் சாகுபடி :***

i. மண் வளத்தை அதிகரிக்கவும், உற்பத்தியை மேம்படுத்தவும்.

e. ***இளைஞர்களை விவசாய தொழில் முனைவோர்களாக உருவாக்குதல் :*** 200 இளம் விவசாய மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகளுக்கு 2 லட்சம் ரூபாய் நிதியுதவி விரிவுபடுத்தப்படும்.

f. ***வேளாண் செயலாக்க கருவிகள் விநியோகம்***

i. பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகளுக்கு உதவுதல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்

ii. இந்தக் கருவிகள்

1. சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள
2. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்

ஆகியோருக்கு வழங்கப்படும்.

4. ***<u>அங்கக வேளாண்மையை ஊக்குவித்தல்</u>*:**

a. தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை 2023 - சமீபத்தில் வெளியிடப்பட்டது

b. அங்கக வேளாண்மையை ஊக்குவிக்க, 32 மாவட்டங்களில் 14,500 ஹெக்டேர் பரப்பளவில் 725 தொகுப்புகள் அமைக்கப்படும்.
c. மாவட்ட ஆட்சியர்களுக்கு விருதுகள் வழங்கப்படும் - அதிக விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்தப் பணியை உரிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும்
d. நீலகிரியில் அங்கக வேளாண்மையை ஊக்குவித்தல்
e. பூச்சிக்கொல்லி எச்சங்களை ஆய்வு செய்வதற்கு அங்கக விவசாயிகளுக்கு ஐம்பது சதவீத மானியம் வழங்குதல்
f. விழிப்புணர்வு உருவாக்குதல்
g. அங்கக வேளாண்மையின் கீழ் கொண்டு வரக்கூடிய சாத்தியமான பகுதிகளை கண்டறிதல்

5. ***சிறந்த அங்கக விவசாயிக்கான நம்மாழ்வார் விருது*** - இயற்கை வேளாண்மை செய்து பிறரை ஊக்குவிக்கும் விவசாயிகளுக்கு குடியரசுத் தினத்தன்று ரூ. 5 லட்சம் ருபாய் வழங்கப்படும்.
6. ***வேளாண் காடுகள் மூலம் பசுமை சூழல்:*** **வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின்** கீழ் வனப் பரப்பை அதிகரிக்க புதிய நர்சரிகள் அமைக்க நிதி உதவி
7. SC/ST விவசாயிகளுக்கு கூடுதல் 20% மானியம் அல்லது அதிக மதிப்புள்ள கூறுகள்
8. **டிஜிட்டல் வேளாண்மை**
   a. ***வேளாண் மின்னணு உதவி மையம்*** நிறுவப்படும்
   b. ***தகவல் பரிமாற்றக் குழு-***வட்டார அளவில் தகவல்களைப் பரப்புவதற்காக விவசாயிகளை உள்ளடக்கிய ***வாட்ஸ்அப் குழுக்கள்*** உருவாக்கப்படும்.
   c. **GRAINS-** (Grower Online Registration of Agriculture Input System)- ஒரே மூலத்திலிருந்து பல்வேறு நன்மைகளைப் பெற விவசாயிகளுக்கு உதவுகிறது –**ஒரே தளமும் அனைத்து பயன்களும் .**
9. **பருப்பு வகைகள் மேம்பாட்டுத் திட்டம்**
   a. புரதத்தின் வளமான ஆதாரம்
   b. சரிவிகித உணவிற்கு அவசியம்
   c. வலுவான தசைகள் மற்றும் ஆரோக்கியமான நரம்பு மண்டலத்தை உருவாக்குவதற்கு இன்றியமையாதது

d. தமிழகத்தில் பருப்பு வகைகளின் பரப்பளவையும் உற்பத்தியையும் விரிவுபடுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டது

e. **துவரை மண்டலம்:**

i. கிருஷ்ணகிரி ,

ii. தர்மபுரி,

iii. திருவண்ணாமலை மற்றும்

iv. சேலம்

10. ***எண்ணெய் வித்துக்கள் சிறப்பு மண்டலம்***

a. ***எள்***

b. ***நிலக்கடலை***

| | | |
|---|---|---|
| திருவண்ணாமலை | கள்ளக்குறிச்சி | விழுப்புரம் |
| ஈரோடு | தருமபுரி | நாமக்கல் |
| சேலம் | திருச்சிராப்பள்ளி | கிருஷ்ணகிரி |
| கடலூர் | திருப்பத்தூர் | அரியலூர் |
| வேலூர் | புதுக்கோட்டை | |

*எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்*

11. ***குட்டை-நெட்டை ஒட்டுரக நாற்றுகளின்*** உற்பத்தியை அதிகரித்தல்.

a. தமிழ்நாட்டின் பருத்தி ஆலைகளின் மூலப்பொருள் தேவையை பூர்த்தி செய்ய ***நீடித்த நிலையான பருத்தி இயக்கம்*** தொடங்கப்படும்.

12. ***ஆலைக்கழிவிலிருந்து இயற்கை உரம் உற்பத்தி*** : ***சேலம்*** மற்றும் ***அமராவதி*** கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஆலைக்கழிவு மண்ணிலிருந்து இயற்கை உரம் தயாரிக்க உள்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

13. ***உழவர் அலுவலர் தொடர்பு திட்டம்-2.0 (UATT)*** :

a. விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்கள் மற்றும் திட்ட பலன்கள் பற்றிய தகவல்களை பிரச்சாரம் செய்தல் .

b. இத்திட்டம் 2020-21 முதல் அமலில் உள்ளது .

## தோட்டக்கலை மற்றும் தோட்ட பயிர்கள் துறை

1. ***மதுரை மல்லிக்கான இயக்கம்***
   a. ஐந்தாண்டு காலம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
   b. மல்லிகையின் பருவகாலத்திற்கு பிந்தைய உற்பத்தியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்
      a. மதுரை,
      b. விருதுநகர்,
      c. திண்டுக்கல்,
      d. தேனி மற்றும்
      e. தென்காசி
2. ***பலா இயக்கம் :***
   a. தமிழ்நாட்டின் மாநிலப் பழம்
   b. காலம் - ஐந்து ஆண்டுகள்
   c. பலாப்பழத்திற்கான ஒருங்கிணைந்த தொகுப்பு மையம் - ***கடலூர் மாவட்டம்***
   d. 21 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது
   e. பாலூரில் உள்ள காய்கறி ஆராய்ச்சி நிலையமானது, பலா பழத்தில் புதிய வகைகளை உருவாக்குதல்,மதிப்பைக் கூட்டுதல் போன்ற ஆராய்ச்சிக்காக மேலும் விரிவு படுத்தப்படும்.

3. ***மிளகாய் மண்டலம்***
   a. ஐந்தாண்டுகளில் மிளகாய் சாகுபடியை 40,000 ஹெக்டேராக அதிகரித்தல்
      a. இராமநாதபுரம்,
      b. விருதுநகர்,
      c. சிவகங்கை மற்றும்
      d. தூத்துக்குடி
4. *கறிவேப்பிலை தொகுப்பு மையம் -* ***கோவை மாவட்டம்***
5. ***முருங்கை இயக்கம் :***
   a. ***முருங்கைக்கான சிறப்பு ஏற்றுமதி மண்டலம் அமையவுள்ள இடங்கள்***
      a. தேனி,

b. திண்டுக்கல் ,
c. கரூர்,
d. தூத்துக்குடி ,
e. திருப்பூர்,
f. அரியலூர் மற்றும்
g. மதுரை

b. ஏற்றுமதி வசதி மையம் - மதுரை.

6. ***வாழைத் தொகுப்பு மேம்பாட்டு திட்டம் - தேனி***
7. ***வாழை ஆராய்ச்சி மையம் கிள்ளிக்குளம்(தூத்துக்குடி) வேளாண் கல்லூரியில்*** நிறுவப்படும்- தென் மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் .
8. *10 லட்சம் குடும்பங்களுக்கு பழ மரக்கன்றுகள்* விநியோகம்
9. பள்ளி மாணவர்களுக்கான பண்ணை சுற்றுலாவை கல்வித் துறையுடன் இணைந்து மேம்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது .
10. **பனை மேம்பாட்டு இயக்கம்**
    a. பனை சாகுபடியை ஊக்குவிக்க வேண்டும்
    b. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரியில் பனை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் .

11. 150 விவசாயிகளுக்கு ***வெளிநாட்டுப் பயிற்சி.***

## வேளாண்மை பொறியியல் துறை

1. ***இ- வாடகை செயலி*** - தனியார் இயந்திரங்கள் மற்றும் இயந்திரவியல் விவரங்களை பதிவேற்றுதல்.
2. ***கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்*** கீழ் ***ஒரு கிராமத்திற்கு இரண்டு அதிதிறன் கலப்பைகள்***

## விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் விவசாய வணிகம்

1. ***புவிசார் குறியீட்டை*** பாதுகாத்தல் - பத்து தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு (GI Tag) பெற முன்மொழியப்பட்டது.
   a. கிருஷ்ணகிரி அரசம்பட்டி தேங்காய்,
   b. கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா,
   c. தஞ்சாவூர் பேராவூரணி தேங்காய்,
   d. மூலனூர் குட்டைமுருங்கை,
   e. சாத்தூர் வெள்ளரி,
   f. தஞ்சாவூர் வீரமாங்குடி வெல்லம் (அச்சு வெல்லம் ),
   g. தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய்,
   h. கடலூர் கொடிமுளை கத்தரி,
   i. மதுரை செங்கரும்பு
   j. சிவகங்கை கருப்புக்கவுனி அரிசி

2. உழவர் சந்தை புதுப்பித்தல்- 50 உழவர் சந்தைகளுக்கான இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) சான்றிதழைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
3. மின்னணு தேசிய வேளாண் சந்தைகளின் விரிவாக்கம் - (e NAM)

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

1. ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும் , திட்டங்களைச் செயல்படுத்தவும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு நிரந்தர மூலதன வைப்பு நிதியாக ***ரூ.100 கோடி*** வழங்கப்பட்டுள்ளது.
2. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ***கோயம்புத்தூர்*** வளாகத்தில் உள்ள ***பூச்சிகள் அருங்காட்சியகத்தை*** கணினிமயமாக்குதல்
3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ***நானோ தொழில்நுட்ப மையம்*** நிறுவப்பட்டுள்ளது
4. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் , மதி -பூமாலை வளாகத்திலும் ***சுய உதவிக் குழுக்களால்*** உற்பத்தி செய்யப்படும் சிறுதானிய

பொருட்களின் நுகர்வை ஊக்குவிக்க சிறுதானிய சிற்றுண்டி உணவகம் *(millet café)*அமைக்கப்படும்.

5. ***மதி*** என்ற முத்திரையின் கீழ் தேன் விற்பனை செய்யப்படும்.
6. வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களை ஆய்வு செய்து தீர்வு காணும் வகையில் வனத்துறை முதன்மை தலைமை பாதுகாப்பு அதிகாரி தலைமையிலான சிறப்புக் குழு அமைக்கப்படும்.
7. ***தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு கழகம் (TN-ApEx)*** உருவாக்கப்படும்.
8. திருச்சி மற்றும் நாகப்பட்டினம் இடையேயான காவிரி ***டெல்டா மண்டலத்தில் வேளாண் தொழில்துறை வழித்தடம்*** அமைக்கப்படும்
9. காவிரி டெல்டா பகுதியில் வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்காக ***டான்சிம்*** மூலம் ***தஞ்சாவூரில் பிராந்திய ஸ்டார்ட் அப் மையம்*** உருவாக்கப்படும்.
10. ஈரோட்டின் கீழ் பவானியில் ஒருங்கிணைந்த நுண்ணீர் பாசன அமைப்பு ஏற்படுத்தப்படும்.
11. ***மின்னணு வர்த்தகக் கிடங்கு ரசீது*** முறையை அறிமுகப்படுத்துதல்.
12. விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க ***வட்டார அளவில்*** ஒரு ***வேளாண் விஞ்ஞானி*** *நியமிக்கப்படுவார்.*

## வேளாண் நிதிநிலை அறிக்கையின் முக்கிய தகவல்கள்

**இந்தியாவில் வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்த முதல் மாநிலம் - கர்நாடகா**

| | மாநிலம் | ஆண்டு | சமர்ப்பித்தவர்கள் | கட்சி |
|---|---|---|---|---|
| **1.** | ***கர்நாடகா*** | *2011-12* | ***பிஎஸ் எடியூரப்பா*** | பா.ஜ.க |
| **2.** | ஆந்திரப் பிரதேசம் | *2013-14* | ***கண்ணா லக்ஷ்மிநாராயணா*** | பா.ஜ.க |
| **3.** | தமிழ்நாடு | *2022-2023* | ***எம்ஆர்கே பன்னீர்செல்வம்*** | **தி.மு.க** |